***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

-----

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.***

| | | |
|---|---|---|
| *Case Number* | : | CC.252/2023 |
| *Prosecution Witness* | : | அ.சா. 1 |
| *Name* | : | முருகானந்தம் |
| *Father's/Husband Name:* | : | நல்லு |
| *Address :* | : | தெற்குத் தெரு, ஆவட்டி அஞ்சல்,<br>திட்டக்குடி தாலுகா, பெரம்பலூர் |
| *Age* | : | 38 /2024 |

**தேதி: 20/02/2024**

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **(எதிரி ஆஜர்.)**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந் வருகிறேன். நான் பி.இ. முடித்து விட்டு விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் நல்லு எனது தகப்பனார். 1956 ஆம் ஆண்டு நடேச கவுண்டர்

என்பவருக்கு சொந்தமான புல எண் 384/6 ல் அமைந்துள்ள 1.38 செண்ட் இடத்தை அதாவது 1 ஏக்கர் 38 செண்ட் நிலத்தை அவர் இறந்தவுடன் அவரது மருமகள் வசந்தா அதாவது முத்துசாமி என்பவரின் மனைவி மற்றும் மகன் சுப்பிரமணியன் மற்றும் மைனர் தனபால் ஆகிய மூவரும் சேர்ந்து 06/12/1995 ஆம் ஆண்டு தாயுமானவன் என்பவருக்கு அந்த இடத்தைப் பொறுத்து ஒரு பொது அதிகாரப் பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அதை தாயுமானவன் மனைகளாகப் பிரித்ததில் சர்வே எண். 384/6 ல் மனை எண் 13, 2808 சதுர அடி இடத்தை எனது தகப்பனார் 10/12/1996 ல் ரூபாய்.15 ஆயிரத்தை கிரய தொகையாக செலுத்தி ஆவண எண். 2969/1996 மூலம் கிரயம் பெற்றார். அதன் பிறகு அந்த இடத்திற்கு எனது தகப்பனார் பட்டா எண். 3138 பெற்றுள்ளார். அந்த இடத்தை சப்டிவிசன் செய்து அந்த இடத்திற்கு சர்வே எண் 384/6 ஏ 4 எனப் பெற்றுள்ளார். அந்த இடத்தின் மொத்த பகுதி 2.60 ஏர்ஸ். அந்த இடம் எனது

தகப்பனார் பெயரில் இருந்த போது சோமண்டாபுதூரைச் சேர்ந்த பச்சைமுத்து என்பவர் போலியாக துறைமங்கலத்தைச் சேர்ந்த செல்லமுத்து என்பவரின் மனைவி தைலம்மையின் புகைப்படத்தை தவறாக பயன்படுத்தி தைலம்மை பச்சைமுத்துவிற்கு எழுதிக் கொடுத்ததாக ஒரு பொது அதிகாரப் பத்திரத்தை ஏற்படுத்தி தந்துள்ளனர். பின்பு அந்தப் புல எண் 384/6 ஏ 1.38 செண்ட் இடத்தை பச்சைமுத்து என்பவர் சோமண்டாபுரத்தைச் சேர்ந்த பழனிமுத்து என்பவருக்கு 3 இலட்சத்தை பெற்றுக் கொண்டு போலியாக கிரயம் செய்து கொடுத்துள்ளார். அதை அறிந்த எனது தந்தை பெரம்பலூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் போலீசார் என்னை விசாரணை செய்தனர். எனது தகப்பனார் 11/08/2014 அன்று இறந்து விட்டார். எனது தகப்பனாரின் இறப்புச் சான்றிதழின் உண்மை நகலை இத்துடன் தாக்கல் செய்கிறேன். அது

**அ.சா.ஆ.1.**

JM-PUBLR

**குறுக்கு விசாரணை 1,3 மற்றும் 6**

1. எனது தகப்பனார் கிரயம் பெற்ற கிரயப் பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். எனது தகப்பனார் கிரயம் பெற்ற மனையின் எண். என்னவென்றால் 13. மனை எண்.13 ல் நான்கு எல்லைகள் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அதாவது 20 அடி வீதிக்கும் தெற்கு, சுப்பிரமணியன் வகையறா இடத்திற்கும் மேற்கு, மனை எண் 12க்கும் கிழக்கு, 385 சர்வே எண்ணிற்கும் வடக்கு ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண்.2969/96 எனது தகப்பனார் கிரயம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். அது **அ.சா.ஆ.2.** இந்த ஆவணம் எனது தகப்பனாரால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 ல் பக்கம் 5ல் 8 ஏக்கர் 31 செண்டிற்கு நான்கெல்லைகளாக பள்ளத்தாதன் நிலத்திற்கும் தெற்கு, சுப்பிரமணிய உடையார் நிலத்திற்கும்

CMJ-JUBILR

மேற்கு, மேற்படி பிரின்ஸ்பால்களின் மீதமுள்ள இடத்திற்கும் வடக்கு, பள்ளராமன் நிலத்திற்கும் கிழக்கு, இதில் 1 ஏக்கர் 38 செண்ட் நிலத்தில் எல்லைகள் பிளாட்களாக போடப்பட்டிருப்பதில் 12 ஆம் மனை பிளாட்டிற்கும் கிழக்கு, 20 அடி கிழமேல் வீதிக்கும் தெற்கு, பிரின்ஸ்பால்களின் மீதமுள்ள இடத்திற்கும் வடக்கு, சுப்பிரமணிய உடையார் நிலத்திற்கும் மேற்கு இதில் கிழமேல் ஜாதி அடி வடபுறம் 53, தென்புறம் 51 தென்வடல் ஜாதி அடி இருபுறமும் 54 உள்ள 2808 சதுர அடி கொண்ட 13 ஆம் பிளாட் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(2) 8.31 ஏக்கரில் 1.38 ஏக்கர் போக மீதி 6.93 ஏக்கர் நிலம் இருக்கும் என்றால் சரிதான். தைலம்மை என்பவர் 1.40 ஏக்கர் நிலத்தை எந்த சர்வே எண்ணில் கிரயம் பெற்றார் என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் 384/3 என்ற சர்வே எண்ணில் கிரயம் பெற்றுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண் 1739/1980 ல் 1980 ஆம் வருடம்

செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரம்பலூர் தாலுகா துறைமங்கலம் கிராமத்தில் இருக்கும் செல்லமுத்து மனைவி தேவேந்திரகுலம் தைலம்மை அவர்களுக்கு ஷை துறைமங்கலம் கிராமத்திலிருக்கும் லெட்சுமணன் குமாரர் விவசாயம் செல்லமுத்து ஆகிய நான் எழுதிக் கொடுத்த புஞ்சை நில சுத்தக் கிரய சாசன பத்திரத்தில் சொத்து விவரமாக சர்வே எண்.384 ல் ஏக்கர் 8.31 ல் ஒந்தாயி அம்மாள் நிலத்திற்கும் மேற்கு, தாதன் நிலத்திற்கும் கிழக்கு, மூக்ககவுண்டன் நிலத்திற்கும் மருதையன் நிலத்திற்கும் தெற்கு, இதில் 1.40 தற்கால சப்டிவிசன் படி சர்வே எண்.384/6 ஏக்கர் 1.40 ல் உள்ளது ஷை சொத்து எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஆனால் நாங்கள் 1956 ல் வாங்கிய சொத்து. ஆவண எண் 7953/2011 மூலம் பச்சைமுத்து என்பவர் பழனிமுத்து என்பவருக்கு எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்து

விவரமாக மனை எண் 12 ஏ விற்கும் கிழக்கு, ஓந்தாயி அம்மாள் நிலத்திற்கும் மேற்கு, 20 அடி அகலமுள்ள கிழமேல் வீதிக்கும் தெற்கு, செங்காண்டியார் நிலத்திற்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி 52, தென்வட ஜாதியடி 54. 2808 சதுர அடிக்கு 260.87 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட காலி மனை எண் 13 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் தான் தவறாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பத்திரத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. எனது அப்பா வாங்கிய இடத்திற்கு பட்டா எப்போது வாங்கப்பட்டது என எனக்குத் தெரியவில்லை. தற்போது எனது அப்பா பெயரில் தான் அந்தப் பட்டா உள்ளதா என்றால் எனது பெயருக்கு என் தகப்பனார் இறந்த பிறகு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. நான்கெல்லைகளை வைத்து தான் சர்வே எண் இடத்தை அளந்து கொடுப்பார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரயம் வாங்கிய பத்திரத்திலுள்ள நான்கெல்லைக்கும் பச்சைமுத்து விற்றதாக கூறப்படும்

பத்திரத்தின் நான்கெல்லைக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எந்த விவரமும் சரிவர தெரியாமல் எனது தகப்பனார் எதிரிகள் மீது பொய்யான புகாரைக் கொடுத்துள்ளார் என்றாலும் அதை அனுசரித்து நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் கொடுத்த புகாருக்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை 5 ஆம் எதிரி தரப்பில்**

1. எனது தகப்பனார் கிரயம் பெற்ற கிரயப் பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். எனது தகப்பனார் கிரயம் பெற்ற மனையின் எண். என்னவென்றால் 13. மனை எண்.13 ல் நான்கு எல்லைகள் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அதாவது 20 அடி வீதிக்கும் தெற்கு, சுப்பிரமணியன் வகையறா இடத்திற்கும் மேற்கு, மனை எண் 12க்கும் கிழக்கு, 385 சர்வே எண்ணிற்கும் வடக்கு ஆகும். என்னிடம்

காண்பிக்கப்படும் ஆவண எண்.2969/96 எனது தகப்பனார் கிரயம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். அது **அ.சா.ஆ.2. இந்த** ஆவணம் எனது தகப்பனாரால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 ல் பக்கம் 5 ல் 8 ஏக்கர் 31 செண்டிற்கு நான்கெல்லைகளாக பள்ளத்தாதன் நிலத்திற்கும் தெற்கு, சுப்பிரமணிய உடையார் நிலத்திற்கும் மேற்கு, மேற்படி பிரின்ஸ்பால்களின் மீதமுள்ள இடத்திற்கும் வடக்கு, பள்ளராமன் நிலத்திற்கும் கிழக்கு, இதில் 1 ஏக்கர் 38 செண்ட் நிலத்தில் எல்லைகள் பிளாட்களாக போடப்பட்டிருப்பதில் 12 ஆம் மனை பிளாட்டிற்கும் கிழக்கு, 20 அடி கிழமேல் வீதிக்கும் தெற்கு, பிரின்ஸ்பால்களின் மீதமுள்ள இடத்திற்கும் வடக்கு, சுப்பிரமணிய உடையார் நிலத்திற்கும் மேற்கு இதில் கிழமேல் ஜாதி அடி வடபுறம் 53, தென்புறம் 51 தென்வடல் ஜாதி அடி இருபுறமும் 54 உள்ள 2808 சதுர அடி கொண்ட 13 ஆம் பிளாட் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

JMPBLR

(2) 8.31 ஏக்கரில் 1.38 ஏக்கர் போக மீதி 6.93 ஏக்கர் நிலம் இருக்கும் என்றால் சரிதான். தைலம்மை என்பவர் 1.40 ஏக்கர் நிலத்தை எந்த சர்வே எண்ணில் கிரயம் பெற்றார் என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் 384/3 என்ற சர்வே எண்ணில் கிரயம் பெற்றுள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண் 1739/1980 ல் 1980 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரம்பலூர் தாலுகா துறைமங்கலம் கிராமத்தில் இருக்கும் செல்லமுத்து மனைவி தேவேந்திரகுலம் தைலம்மை அவர்களுக்கு ஷை துறைமங்கலம் கிராமத்திலிருக்கும் லெட்சுமணன் குமாரர் விவசாயம் செல்லமுத்து ஆகிய நான் எழுதிக் கொடுத்த புஞ்சை நில சுத்தக் கிரய சாசன பத்திரத்தில் சொத்து விவரமாக சர்வே எண்.384 ல் ஏக்கர் 8.31 ல் ஒந்தாயி அம்மாள் நிலத்திற்கும் மேற்கு, தாதன் நிலத்திற்கும் கிழக்கு, மூக்ககவுண்டன் நிலத்திற்கும்

JMV PBLR

மருதையன் நிலத்திற்கும் தெற்கு, இதில் 1.40 தற்கால சப்டிவிசன் படி சர்வே எண்.384/6 ஏக்கர் 1.40 ல் உள்ளது ஷை சொத்து எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஆனால் நாங்கள் 1956 ல் வாங்கிய சொத்து. ஆவண எண் 7953/2011 மூலம் பச்சைமுத்து என்பவர் பழனிமுத்து என்பவருக்கு எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்து விவரமாக மனை எண் 12 ஏ விற்கும் கிழக்கு, ஓந்தாயி அம்மாள் நிலத்திற்கும் மேற்கு, 20 அடி அகலமுள்ள கிழமேல் வீதிக்கும் தெற்கு, செங்காண்டியார் நிலத்திற்கும் வடக்கு இதில் கிழமேல் ஜாதியடி 52, தென்வட ஜாதியடி 54. 2808 சதுர அடிக்கு 260.87 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட காலி மனை எண் 13 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் தான் தவறாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பத்திரத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. எனது அப்பா வாங்கிய இடத்திற்கு பட்டா

www.LiveLaw.in

எப்போது வாங்கப்பட்டது என எனக்குத் தெரியவில்லை. தற்போது எனது அப்பா பெயரில் தான் அந்தப் பட்டா உள்ளதா என்றால் எனது பெயருக்கு என் தகப்பனார் இறந்த பிறகு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. நான்கெல்லைகளை வைத்து தான் சர்வே எண் இடத்தை அளந்து கொடுப்பார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரயம் வாங்கிய பத்திரத்திலுள்ள நான்கெல்லைக்கும் பச்சைமுத்து விற்றதாக கூறப்படும் பத்திரத்தின் நான்கெல்லைக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எந்த விவரமும் சரிவர தெரியாமல் எனது தகப்பனார் எதிரிகள் மீது பொய்யான புகாரைக் கொடுத்துள்ளார் என்றாலும் அதை அனுசரித்து நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் கொடுத்த புகாருக்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1996 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு செய்த போது நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்றுள்ளேன். போலியாக ஆவணங்கள்

JM-PBLR

தயாரிக்கப்பட்டது என பிற நபர்கள் கூறியதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆவண எண் 1739/1980 அடிப்படையில் தான் 389/4/2010 என்ற ஆவணத்தை 5 ஆம் எதிரி பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. 5 ஆம் எதிரி எந்த வித முறைகேட்டிலும் ஈடுபடவில்லை என்றாலும் சார்பதிவாளர் என்ற முறையில் அவரது பணியை சட்டமுறைப்படி செய்து வந்தார் எனவும் அவருக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

*Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.*

sd/-

*Judicial Magistrate No.I,*

*Perambalur.*

JM-PBLR